Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணி சகாயம்.

கலைமகள்

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபெறநில்.

வெண்டாபனை க.	1913-ம் ஆ ஜுன் ௴	இதழ் ௯.

பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
புதுவை.

வருஷ சந்தா ரூ 1 தபாற் கூலி அணா 4	வெளிநாட்டிற்கு ரூ 2 தனி சஞ்சிகை அணா 2

புதுவை வித்தியாபிவர்த்தனி அச்சுக்கூடம்.

உள்ளுறை.

	பக்கம்.
பாலசிக்ஷை:— ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை.	1
ரமணி:— (ஓர் சிறிய காதற் கதை) ஸ்ரீமத் சு-அ-சுப்பராயப் பிள்ளை, புதுவை...	3
கலைமகள் கழகத்தின் இரண்டாவது வருடோற்சவம்:— ஸ்ரீமத் தி - திருப்புளிசாமி ஐயர், ஷை கழகத்தின் காரியதரிசி.	8
வாழைப்பழச் சோம்பேறி யார்?— இதோப தேசி. ...	11
மணிமேகலை:— பத்திராதிபர்	12
மயிலச்சிலேடைவெண்பா:— ஸ்ரீமத் வித்வான் பு. அ. பெரியசாமிப்பிள்ளை.	16
மங்கலர்:— வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ... ... ஸ்ரீமத்வீர - சுப்பைய சுவாமிகள்.	17
நியாயமாலா:— ஸ்ரீமத் அநந்தபத்மநாப சுவாமிகள், ... காஞ்சிபுரம்	18
சுஜனசம்வாதம்:— ஸ்ரீமத் ஆ. செங்கல்வராய முதலியார். காஞ்சிபுரம்	19
சற்றுப் பொறு:— ஸ்ரீமத் ஆ - செங்கல்வராய முதலியார், காஞ்சிபுரம்.	21

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

நமது கலைமகள் கழகத்தின் இரண்டாவது வருடோற்சவம் காரணமாக, இப்பத்திரிகை சிறிது தாமதமாக வெளிப்பட நேர்ந்தது. அடுத்த பத்திரிகை எப்போதும் போல மாதமுதலில் வெளியாகும்.

கலைமகள் வெண்டாமரை ஆறாவதிதழும் வெளிப்பட்டு விட்டது. இதுவரையும் தமது சந்தாவையனுப்பாமலிருப்பவர்கள் இதுகண்ட வுடனேனும் தயைசெய்து அனுப்பிவிடுவார்களென்று நம்புகின்றோம்.

தங்கள் விலாசத்தில் மாறுதல் நேரப் பெற்றவர்களும், பத்திரிகை வந்து சேரப் பெறாதவர்களும் உடனுக்குடன் தெரிவித்து விடல் வேண்டும்.

ப - ர்.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை க.] 1913-ம் ஆடி ஜூன் மீ [இதழ் சு.

இலௌகிகப் பகுதி.

பால சிக்ஷை.

(தொடர்ச்சி.)

சு - வது அத்தியாயம்.

இரண்டாவது மூன்றாவது வயது.

நற்குண நற்செய்கைகளில் இவ்வயதுக் குழந்தைகளைப் பழக்கும் சிற்சில முறைகள்.

நீதி மொழிகளைப் பகர்ந்தும் புத்திமதிகளைப் புகட்டியும் இவ்விளங் குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தைக் கற்பிக்க முயல்வது அசாத்தியம். எனெனில், எழெட்டு வயதுக்குப் பின்னரோ பகுத்தறிவு எற்படுகிறது. அதற்குமுன் இது நன்று இது தீது எனும் உறுதி எங்ஙனம் அவைகட்கு நியாயப் பிரமாணமாகப் புலப்படும்?

நற்காட்சியினாலும் நற் பழக்கத்தினாலுமே நல்லொழுக்கம் உண்டாகும் வழியைத் தேடவேண்டும்.

ஆதி தொட்டே குழந்தைகள் நல்லொழுக்கத்தை யடைவதற்கு முக்கிய சாதனம் நாம் அவர்கள்மாட்டுப் பாராட்டும் உள்ளன்பே. மெய்யான

130

அன்பு உண்டு இல்லை என்பதைச் சுலபமாகப் பகுத்தறிவில்லாத சிறு குழவிகட்கும் ஊகித்தறியும் சக்தி இயல்பாகவே ஏற்பட்டிருக்கின்றது. அன்பினால் நம் வசப்பட்ட குழந்தைகளை நன்னெறியில் பழக்குவ தெளிது.

சிறுவர்களிடத்தில் பாலொடு புகட்டவேண்டிய நற்குணங்களில் முக்கியமானது பரோபகாரமே.

நான் எனது என்பதே வினைகட்கெல்லாம் வித்தாகிறதென மறைகளெல்லாம் முறையிடுகின்றன. இவ் வகை மமதைகளை யகற்றும் வழியைத் தேடியன்றோ இருடிகளும் ஞானிகளும் திரிகின்றனர். தன்னைப்போல் அனைவரையும் நேசிக்காவிடின் மக்கட் பேற்றினால் அடையக்கூடிய பயனென்னை?

ஆகவே குழந்தைகளை ஆதிமுதல் தன்னைப்போல் பிறரையும் நேசிக்கப் பழக்கிவரின் அது சீவிய காலமுழுதும் பரோபகார சிந்தையுடையதாயிருக்கும்.

விளையாட்டுப் பொருள்களையும் பட்சணாதிகளையும் தன் சிறு தோழர்களுடன் பாகித்துத் துய்க்கப் பழக்கவேண்டும். பூததயையைப் பாலப் பிராயத்தினின்றே அபிவிருத்தி செய்வது அவசியம். பறவை முதலிய சிற்றுயிர்களை உபாதித்து உவகையுறும் குழந்தை, தக்க வயது வந்தபோது மானிடர்களின் துயரத்திற்கு எங்ஙனம் மனமிளகும்?

சிற்சில தாயர்கள் தங்கள் குழந்தைகள் தங்களை இமிசிக்கவும் தூஷிக்கவும் கண்டு மனமகிழ்வர். அந்தோ! இத்துரப்பியாசத்தினால் பின்வரும் கெடுதிகளை அன்னவர் உணர்ந்திலர்கொல்!

"அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்னும் உத்தம நீதியை உணர்ந்துகொள்ளாத பிள்ளைகள், சிறு பிராயத்தில் பெற்றோர்க்கு விளையாட்டாகச் செய்துவந்த கொடுமைகளை வயது வந்த பின்னர் வினையாகச் செய்வர்.

நிற்க, ஒவ்வொரு குற்றத்தினிடத்தும் இயல்பாகவே அததன் தண்டனை அமைந்துள்ளதென்பதும், அது பெற்றோராலும் மற்றோராலும் விதிக்கப்பட்டதல்லவென்பதும், குற்றத்தை விலக்கினால் மாத்திரம் தண்டனை விலகுமென்பதும் இவை முதலிய உறுதிகளை அதி பாலிய வயதினின்றே அநுபவத்தினால் குழந்தைகள் அறிந்துணரும்படி செய்துவரவேண்டும். இக்கருத்தை விளக்க ஓர் உதாரணம் கூறுதும்.

ஓர் குழந்தை பெற்றோர் சொல்லை மீறி மூர்க்கத்தனமாய் ஓடிக்குதித்தால் விழுந்து காயப்பட்டுத் துன்புறுமன்றோ. இப்படிப்பட்ட சமயத்தில் தாயர்கள் என்ன செய்கின்றனர் என்பதைச் சற்று விசாரிப்பாம். விரைவிற்சென்று வீழ்ந்த குழந்தையை வாரியெடுத்து அதன் குற்றத்தை வீழ்ந்த இடம் முதலிய பொருட்களின்மீது சுமத்தி அப்பொருள்களைத் தண்டிப்

131 123

பதுபோற் காட்டிக் குழந்தையைச் சாந்தப்படுத்த முயலுவர். இவ்வாறு நிரபராதப் பொருள்களின்மீது குற்றத்தை யேற்றி அவைகளைத் தண்டிப்பதனால் குழந்தை தான்செய்த பிழையை உணர்ந்து தெரிந்து நடக்க வழியில்லாமற் போகின்றது.

நமது இந்து தேசத்தில் குழந்தைகளை வளர்க்கு முறையில் முக்கிய தவறுயாதெனில், இளம் பிராயந் தொட்டே பலவாற்றாலும் மனோபலத்தையும் வீரத் தன்மையையும் குன்றச்செய்து, அன்னவர்கள் வாழ்நாள் முழுவதும் மனவெழுச்சியற்றவர்களாகச் செய்து விடுவதே. இப்படிச்செய்வதற்குப் பிள்ளைகள் மனதில் பல விஷயங்களாலும் பயத்தை யேற்படுத்துவதே முக்கியகாரணம். பயமென்பது மனிதர்கட்கு இயல்பா யிருக்கக்கூடியதல்ல. செயற்கையினாலேயே ஏற்படக்கூடியது. இதைக் குழந்தைகள் மனதில் விளைவித்தலே அவர்கள் மனவெழுச்சியற்றுப்போவதற்குக் காரணம்.

மனதிலுற்சாகமும் தைரியமும் இல்லாதவர்கள்மீதே நம்மவர்களுக்கு அதிக மதிப்பு உண்டென்று சொன்னாலும் சொல்லலாம். அங்ஙனமே ஒருவர் யோக்கியதையை விசேஷித்துக் கூறும்போது, அவர் பரமசாதுவென்றும், ஒரு விஷயத்திலும் கவனியாதவரென்றும், பசுப்போன்றவரென்றும் போற்றுவர். இவ்வித எதிர் மறையான குணங்கள்மாத்திரம் மிகுதிப்படுதலால் மானிட சென்மம் பெற்றதனாலாய பயனென்னை ?

உற்சாகமும் மனோ தைரியமும் அற்றிருப்பதே உத்தமமெனின், மரம் மட்டை முதலிய பொருள்களுமன்றோ நம்மினுஞ் சிறந்தனவாகும்.

சிறுவர்களை இளமைப் பருவத்தினின்றே மனவுற்சாகமுள்ளவர்களாகவும் நன் முயற்சியுள்ளவர்களாகவும் இருக்கப் பழக்கி வரவேண்டும். தக்க வயது வந்தபின்னரே நற்குண நற்செய்கைகளைப் பிள்ளைகட்குப் போதிக்கலாமென அசட்டையாயிருத்தல் முற்றுந்தவறு. இளமையில் ஏற்படும் பழக்கமே கடைசிவரையில் வரும். இதற்கு " தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் " என்னும் ஆன்றோர் மொழியே சான்றாமென்க.

(இன்னும் வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

ரமணி.

ஓர் சிறிய காதற் கதை.

அத்தியாயம் 1.

ஜனார்த்தனன் தன் பெற்றோர்களுக்கு ஏக புத்திரன். அவனைப் பெற்ற ஐந்தாம் நாள் அவனது தாய் உயிர் துறந்தாள். அவனது மூன்றாம் வயதில்

அவனது தந்தையும், தன் புத்திரனைத் தன் சகோதரி பங்கஜவல்லியம்மாள் பாதுகாவலில் விட்டு மரணமடைந்தார். பங்கஜவல்லியம்மாளும் அவளது நாயகனும் ஜனார்த்தனனையும் தங்களது ஏக புத்திரி ரமணியையும் தங்களிரு கண்மணிகளாகப் பாவித்து அவ்விருவரையும் அத்தியந்த அன்போடு ஆதரித்து வளர்த்து வந்தார்கள். ஆனால் ஜனார்த்தனனது பதினைந்தாம் பிராயத்தில் அவனது மாமனும் காலஞ் சென்றார். அச் சமயம் பாடசாலையிற் கல்வி பயின்றுகொண்டிருந்த ஜனார்த்தனன், தான் இனிக் கல்வி பயிலுவதை நிறுத்தி என்னவேனும் ஓர் உத்தியோகத்தில் அமரவேண்டுமென விரும்பினான். ஆனால் இவ் விருப்பத்திற்கு அவனது அத்தை இணங்கவில்லை. அப் புண்ணியவதி தன் மருகன்பாற் கொண்ட பேரன்பினால், அவன் கல்வியில் சிறந்த அபிவிர்த்தி பெறவேண்டுமென விரும்பி, அவன் பாடசாலைக்குப்போவதை நிறுத்தலாகாதென வற்புறுத்திக் கூறி அவனைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்து, தான் அணிந்திருந்த சுமார் ஆயிரத் தெண்ணூறு ரூபாய் மதிப்புள்ள தன் ஆபரணங்களை விற்று அவ் வணிகளின் விலையாகிய நிதி வழங்கிய வட்டியைக் கொண்டும் தன் கணவனது ஆஸ்தி வழங்கிய சொற்ப வருமானத்தைக் கொண்டும் ஜீவனாம்சச் செலவுகளைச் சற்றுச் சிக்கனமாகவே செய்து தன் மருகனது கல்விச் செலவையும் நிர்வகித்து வந்தாள். ஜனார்த்தனனும் தன் அத்தையின் அகம் பூரிக்கத் தினேதினே கல்வியில் விசேஷ அபிவிர்த்தியுற்று உயர்தரப் பரீட்சைகளிற்றேறி அவனது இருபத்திரண்டாம் வயதில் ஓர் சிறந்த நியாயவாதி (Lawyer) ஆயினான்.

சங்கீதத்தில் ஜனார்த்தனன் விசேஷ பிரீதியுடையவன். ஓர் நாள் மாலைப்பொழுது அவன் தன் அறையில் வீணை வாசித்துக்கொண்டிருந்தான். அவ்வேளையில், ஜலம் கொணர்வதற்காக, குடமெடுத்துக்கொண்டு வாயிற்படிவரையிற் சென்ற அவனது அத்தை, கையிலொரு மஞ்சட் பத்திரிகையுடன் வீட்டினுள் திரும்பி, ‘ரமணி!’ என்றழைக்க, ‘ஏனம்மா?’ என்ற குரலுடன் ரமணி என்ற ரூபவதி கூடத்திற்கு வந்தனள்.

“இதென்ன பத்திரிகை? பார்” என்றனள் அன்னை. ரமணி மௌனமாய்ப் பத்திரிகையைத் தனக்குள் வாசித்துக்கொண்டு புன்னகையுடன், “பக்கத்துத் தெரு சாவித்திரிக்கு இந்த மாதம் 25-ம் தேதி கலியாணமாம், நாளைக் காலையில் நிச்சிதார்த்தமாம்.” என்று கூறி முடிப்பதற்குள் ஜனார்த்தனனது அறையில் வீணை நாதம் திடீரென நின்றுவிட்டது.

“மாப்பிள்ளை யார்?” என வினவினள் அன்னை.

“மிராசுதார் விஜயரங்கதாசர்.”

“நமது ஜனார்த்தனனோடு வாசித்தானே கண்ணையன், அவனுடைய தகப்பனா?”

" ஆமாம் அவர்தான். விஜயரங்கதாசர் என்ற பெயரையுடைய வேறெந்த மிராசுதாரிருக்கிறார்? "

" ஐயோ பாவம்! சாவித்திரி சிறு குட்டி! நாற்பது வயதுமாப்பிள்ளையைக் கலியாணஞ் செய்துகொள்ளப் போகிறாள்! ஆனால் அவளோடு லக்ஷ்மி எப்பொழுதும் விளையாடிக்கொண் டிருப்பாள். அந்தப் பாக்யம் ஒன்றே மற்றக் குறைகளை நிவர்த்தி செய்துவிடும். " எனக் கூறிவிட்டுப் பங்கஜவல்லியம்மாள் குடத்தோடு வெளிச் சென்றனள்.

தன் அன்னை அகன்றவுடன் ரமணி ஜனார்த்தனன் அறைக்குச் சென்றாள். ஆங்கு அவன் தன் முன்பு வீணையை வைத்துக்கொண்டு தன் வலக்கை விரல்களைத் தன் மீசையில் வைத்துக்கொண்டு என்னவோ ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

" ஏனத்தான் வீணை வாசிப்பதைத் திடீரென நிறுத்திவிட்டீர்கள்? " என்றனள் ரமணி.

" சாவித்திரிக்கா கலியாணம்? " என்றனன் ஜனார்த்தனன்.

" ஆமாம் சாவித்திரிக்குத்தான் கலியாணம், அவள் கலியாணத்திற்கும் நீங்கள் வீணை வாசிப்பதை நிறுத்தியதற்கும் என்ன சம்பந்தம்? "

" உன் தோழியின் விவாகத்தைப்பற்றி நீயும் அத்தையும் பேசிக்கொண்டதில் நானும் சிறிது கவனம் செலுத்தி வீணை நாதத்தை நிறுத்தினேன். இதிலென்ன குற்றம் ரமணீ? "

" அது குற்றமென்று நான் எப்பொழுது சொன்னேன் அத்தான் " எனத் தன் சிவந்த இதழ்களில் புன்னகை திகழப் புகன்றனள் ரமணி.

" சரி இந்த வீண் பேச்சுக்களை விட்டு உட்கார்ந்து ஒரு பாட்டுப்பாடு. நான் வீணை வாசிக்கிறேன் அல்லது நீ வீணை வாசி, நான் பாடுகிறேன். "

" இப்பொழுது எனக்குச் சங்கீதத்தில் கவனம் செல்லவில்லை. ஆகையால் சாவித்திரியைப் பற்றிப் பேசுவோம். " எனச் சொல்லிக் கீழே உட்கார்ந்தனள் நங்கை.

" சாவித்திரியைப்பற்றி என்ன பேசப் போகிறாய்? " எனச் சற்றுத் திகைத்துக் கூறினன் ஜனார்த்தனன்.

" சாவித்திரிக்குக் கலியாணம் என்ற மொழிகளை நான் சொன்ன க்ஷணத்திலிருந்து உங்கள் மனம் அமைதியற்றிருக்கிறதல்லவா? "

" சாவித்திரிக்கு விவாகமென்றால் என் மனம் ஏன் அமைதியற்றிருக்கவேண்டும்? நீ என்னென்னவோ பிதற்றுகிறாய். "

" நானா பிதற்றுகிறேன்! " என்ற மொழிகளுடன் எழுந்து சரசர வென ஜனார்த்தனனருகே சென்று தன் அழகிய வலக் கரத்தை அவனது அகன்ற மார்பின்மீது வைத்துக்கொண்டு " அத்தான்! என்னிடம் ஏன்

போய்சொல்லுகிறீர்கள்? சாவித்திரியின் விவாகத்தைப்பற்றிய சமாசாரம் உங்கள் அக அமைதியைப் பங்கப் படுத்திற்றென முதன்முதல் உங்கள் வீணை வெளிப்படுத்திற்று. பின்பு உங்கள் முகம் மொழிந்தது. இப்பொழுது உங்கள் நெஞ்சமும் படபடவெனப் பதைத்துப் பகர்கின்றதே" எனவியம்பி, தன் அத்தான் மார்பின்மீதிருந்த கரத்தை எடுத்துவிட்டு அவனருகே வீற்றிருந்தனள் ரமணி.

"ரமணீ! என்னோடு இப்பொழுது விளையாடாதே, எனக்குத் தேக சௌக்கியமில்லை. ஆகையால்தான் என் முகம் மாறுபட்டிருக்கிறது. நீ பாடினால், உன் இனிய பாட்டு என் அசௌக்கியத்தைச் சிறிது நிவர்த்திக்கும், உனக்குப் பாட இஷ்டமில்லையானால் வேறு என்னவேனும் வேலையைப்பார் போ"

"அத்தான்! உங்கள் ரகஸ்யத்தை எனக்குச் சொன்னால் நன்மை உண்டாகுமேயொழியத் தீங்கொன்றும் விளையாது. இத்தனை நாள் என்னோடு பழகியிருக்கிறீர்களே, நான் எப்பொழுதாவது உங்களுக்கு என்னவேனும் தீங்கிழைத்திருக்கிறேனோ?"

"என்ன ரகஸ்யத்தைச் சொல்லச்சொல்லுகிறாய் ரமணீ?"

"சாவித்திரியினிடம் நீங்கள் காதல்கொண்டிருக்கும் ரகஸ்யத்தைத்தான்"

"ரமணீ? இன்னொருமுறை இவ்விதமான பரிகச வார்த்தைகளைப் பேசினால் நான் பெருங் கோபமடைவேன். எழுந்து உன் வேலையைப் பார் போ." என்று சற்றுச் சினந்து கூறினான்.

நேரிழையாள் நெடுவிழிகளில் நீர் ததும்பிற்று. அல்லலுற்ற அகத்தோடு தன் அத்தான் கட்டளைப்பிரகாரம் தன்வேலையைப் பார்க்கச்செல்ல எழுந்தாள். அப்பொழுது ஜனார்த்தனன் அவள் கரத்தைப் பற்றிக்கொண்டான்.

"ரமணீ என் அழுகிறாய்? நான் என்ன சொல்லிவிட்டேன், அழாதேயம்மா, உட்கார்."

பெண்மணி தன் ஆடையின் முன்றானையால் தன்கண்களைத் துடைத்துக்கொண்டே மீண்டும் உட்கார்ந்து, "நான் நீங்கள் கோபித்துக்கொண்டதற்காக அழவில்லை, நான் உங்கள்பிரியசகோதரியாய்ப்பிறக்கும்பாக்கியம் பெறவில்லையேயென்றுதான் விசனிக்கின்றேன். நான் உங்கள்பிரியசகோதரியாயிருந்தால் உங்கள் ரகஸ்யங்களை எனக்குச் சொல்லியிருப்பீர்கள்."

"கண்மணீ! நீ எனக்குச் சகோதரியிலும் இனியவளல்லவா."

"ஆனால் நான் உங்களுக்குச் சாவித்திரியைப் பார்க்கிலும் இனியவளல்லள்."

“ சாவித்திரிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம், அவள் என் எனக்கு இனியவளாகின்றாள் ? நீ என் அத்தை பெண், என்னைக் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்து எனக்குக் கல்வியளித்த புண்ணியவதி உன் அன்னையே. ஆகையால் என் உடல், பொருள், ஆவி, கல்வி, புத்தி ஆகிய யாவும் என் அத்தையின் இனிய ஏக புத்திரியாகிய ரமணிக்கே உரியது. ”

“ உங்கள் உடல் பொருள் ஆவி ஆகிய யாவும் ரமணிக்குரியது. ஆனால் உங்கள் உள்ளம்மாத்திரம் சாவித்திரிக்குரியது அத்தான்! உங்கள் அகத்தை நான் நன்றாய் அறிவேன். நான் அறிந்த விஷயத்தை நீங்கள் வாயினாற் சொல்வதில் பாதகமென்ன. நான் சிறு பெண்ணாயிருந்தகாலத்தில் பொய் பேசாதே பொய் பேசாதே என்று சொல்லி என் கன்னத்தை இரண்டு மூன்று முறை கிள்ளியிருக்கிறீர்கள், ஞாபகமிருக்கிறதா ? இப்பொழுது உங்கள் கன்னத்தை நான் கிள்ளுவதற்குத் தக்க சமயம் வாய்த்திருக்கிறது ” என நகைத்துக்கொண்டே நவின்றனள் நங்கை.

ஜனார்த்தனன் புன்னகையுற்றான். தான் ரமணியின் கன்னத்தைக் கிள்ளியதை நினைத்த பிறகுதான் அவன், தான் பொய்யுரைத்தது தவறென்றுணர்ந்தான். ஆகையால் அவளுக்கு உடனே உண்மையை உரைத்திடத் தீர்மானித்து, “ ரமணீ! உன்னிஷ்டப்படியே என் ரகஸ்யத்தை உனக்குச் சொல்லி விடுகிறேன், கவனமாய்க் கேள் ” என்றனன்.

ரமணி தன் காதலனருகே சற்று நெருங்கி உட்கார்ந்தனள்.

ஜனார்த்தனன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். “ நாணப்படாதேயுங்கள். நான் உங்கள் சகோதரி என்றெண்ணிக்கொள்ளுங்கள். ” என்று பெண்மணி மொழிந்திடவே புன் முறுவலுடன் கூறலாயினன்:—

“ சாவித்திரியின்பால் நான் காதலுற்றது மெய்தான். ஆனால் இப்பொழுது அக்காதலை முற்றும் மறந்துவிட்டேன். என்பால் அன்னையினும் அன்பு பாராட்டி எனக்கு அன்னமளித்து ஆடையளித்துக் கல்வியளித்த அத்தையும் நீயும், நான் உன்னையே காதலித்து உன்னையே மணந்து கொள்ள வேண்டுமென்றெண்ணிக்கொண்டிருக்க, நான் வேறு ஸ்திரீயை மனத்தால் நினைப்பதே மகா பாதகமல்லவா ? ”

“ நீங்கள் சாவித்திரியை மறந்து விட்டது உண்மையானால், சாவித்திரியின் விவாகத்தைப்பற்றிய சமாச்சாரத்தைக் கேட்டவுடன் ஏன் உங்கள் நெஞ்சம் துடித்தது ? ” .

இவ் வினாவிற்கு உத்தரமுரையாது சிறிது நேரம் மௌனமாயிருந்தனன் ஜனார்த்தனன். பின்பு அவள் கரத்தைத் தன் கையிலெடுத்துத் தன் மார்பின் மீது வைத்து “ இப்பொழுது என் மனம் எவ்வளவு அமைதியாயிருக்கிறது பார் ரமணீ! சத்தியமாய்ச் சொல்லுகிறேன் கேள், நான்

சாவித்திரியை முற்றும் மறந்துவிட்டேன். இப்பொழுது நீயே எனது அகத்திற்கினிய காதலி, உன் சந்தேகங்களை யெல்லாம் சமுத்திரத்திற் கரைத்துவிடு. " என்று தன் காதலியின் கன்னங்களொன்றை முத்தமிட்டான்.

இச் சமயம், ஜனார்த்தனனது நண்பரொருவர் அவனது வீட்டு முற்புறவாயிற் கதவைத் தட்ட அவன் எழுந்து சென்று அந் நண்பரைக் கண்டு அவரை மாடிக்கு அழைத்துச் சென்றனன்.

" நல்ல சமயத்தில் சனியன்போல் வந்தான் பாவி" என மெல்லிய குரலிற் கூறிக்கொண்டே ரமணி சமயலறைக்குச் சென்றாள். பங்கஜ வல்லியம்மாள் நீர் நிறைந்த குடத்துடன் ஆற்றிலிருந்து அகத்திற்கு வந்த சிறிது நேரத்திற்குப் பிறகு அவளது புத்திரி அவளை நோக்கி - " அம்மா ! நீஎனக்கு ஒரு உத்தரவு கொடுக்கவேண்டும். " என்றாள். " என்ன உத்தரவு கொடுக்கவேண்டும் ? " என்றனள் அன்னை. " நான் சாவித்திரியின் நிச்சிதார்த்தச் சடங்கைப் பார்க்க விரும்புகிறேன். இன்றிரவு நீ என்னை அவள் வீட்டிற்கு அழைத்துப்போகவேண்டும் " என்றனள் புத்திரி.

" நிச்சிதார்த்தச் சடங்கிற்கு நீ ஏன் போகவேண்டும் ? " என வியப்புடன் வினவினள் பங்கஜ வல்லியம்மாள்.

" நான் சாவித்திரியைப் பார்த்து வெகு நாளாயிற்றம்மா. அவசியம் இன்றிரவு நீ என்னை அவள் வீட்டிற்கு அழைத்துப்போகவேண்டும். "

" ஆமாம் நீ அவசியம் வரவேண்டும். ரமணீ ! உன்னை அழைத்துப் போவதற்கேநான் வந்தேன். " எனக் கூறிக்கொண்டே ஓர் மாது ரமணி அருகே வந்து நின்றாள்.

" வாருங்களம்மா, வாருங்களம்மா, ஏன் நிற்கிறீர்கள், உட்காருங்கள். ரமணீ ! ஒருபாய் எடுத்துக்கொண்டுவா " என்றனள் பங்கஜவல்லியம்மாள்.

புதிதாய் வந்த இந்த மங்கை யாவள் ? இவள்தான் சாவித்திரியின் அன்னையாகிய ருக்மணி அம்மாள்.

(தொடரும்.)

சு - அ - சுப்பராயப்பிள்ளை.

உ

புதுவைக் கலைமகள் கழகத்தின்

இரண்டாவது வருடோற்சவம்.

பிரமாதீச ஸு வைகாசி மீ - ௩ ௨ முதல் ௧௨ ௨ வரையில், புதுவை ஸ்ரீ பாலயசுவாமிகள் மடாலயத்தில், நமது கலைமகள் கழகத்தின் இரண்டாவது வருடோற்சவம் நடைபெற்றது.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார்மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாசாரியசுவாமிகள் அக்கிராசனமமர்ந்து சபையை அலங்கரித்தருளினார்கள். சபையின் அங்கத்தினர் சிலரும், வெளியூர் வித்வ சிரோமணிகள் சிலரும் உபந்யாசம்புரிந்து சபையைக் களிக்கச்செய்தனர்.

வைகாசி மீ ௯-ம்வ குருவாரம் மாலை ௬ மணிக்கு எமது வேண்டுகோளின்படி, கலைமகள் கழகத்தின் வருடோற்சவத்தைமுன்னிட்டு, ஸ்ரீவல்லீசேநாசமேத ஸ்ரீசிவசுப்பிரமண்ணியக்கடவுளோடு எழுந்தருளியதிருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீஞானியார்மடாலயத்துச்சுவாமிகள், சபையார்களும் அன்பர்களும் எதிர்கொண்டுவரவேற்க, இரவு ௮ - மணிக்குச் சபா பிரவேசம் செய்தருளினார்கள். உடனே கடவுள் வாழ்த்தும், வரவேற்புபசரிப்பும் நடைபெற்றதும், மகாஜன சபையார் வேண்டுகோளின்படி சுவாமிகள் அக்கிராசனம் அமர்ந்தருளினார்கள். உடனே சுவாமிகள் அநுமதிபெற்றுக் கழகத்தின் வருடாந்த அறிக்கைப் பத்திரம் வாசித்து முடிந்ததும், சுவாமிகளால் முகவுரைப் பிரசங்கம் செய்தருளப் பெற்றது.

௧௦ - ம்வ முதல் ௧௨-ம் வ வரையில் சபையின் அங்கத்தினர் சிலரால் கடவுள், நட்பு, வேடன் சிவபூஜை கடைப்பிடித்த சரிதம் என்னும் விஷயங்களும், ஸ்ரீகைலாயபரம்பரை திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகரும் தூத்துக்குடி சிவானுபூதிச் சித்தாந்தசங்க அக்கிராசனாதிபதியுமாகிய ஸ்ரீமத் பொ · முத்தையபிள்ளையவர்களால் அறம், அன்பு என்பனவும், திருக்கோவலூர்ச் சைவசித்தாந்த சபை காரியதரிசி ஸ்ரீமத் ம. ரா. குமாரசாமிப்பிள்ளையவர்களால் சுத்த ஆகாரம், அஞ்சுதல், சேந்தனார் சரித்திரம் என்பனவும், பரங்கிப்பேட்டை கவர்ன்மெண்ட் பெண்கள் பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமத் அ. முத்தையமுதலியாரவர்களால் புலால் மறுத்தல், தமிழ் மொழியின் சிறப்பு என்பனவும் உபந்யாசம் செய்யப்பட்டன. ஒவ்வொரு நாளும் சபாநாயகரவர்கள் முடிவுரைப்பிரசங்கம் அதி அற்புதமாக நடைபெற்றது.

கடைசியில் வந்தனோபசார முடிந்தவுடன், திருவெண்ணெய்நல்லூர் கம்பர் கலாமிர்த சங்கம் காரியதரிசி ஸ்ரீமத் தி-வடிவேலுமுதலியாரவர்கள் இவ்வாழ்த்துப் பாக்களைக் கூறினார்கள்.

பொதியமலை தனிற்பிறந்த தமிழணங்கும் புதுவைநகர் போந்துவைகி
நிதியமிகப் பெற்றவர்தந் தண்ணளிபோற் கல்விதனை நிறையப் பெய்து
பதியருளை மிகக்காட்டிப் பண்புபெறச் செய்வித்துப் பணிவோர்க்கெல்லாங்
கதியளிக்குங் கலைமகளின் கழகமினி மிகவோங்கிக் களிக்க மாதோ.

138

எத்தனையோ பெரியோர்க ளிப்பதியின் முன்பிருந்தா ரென்ற வாக்குப்
புத்தகத்திற் பார்த்ததனைப் புதுமைபடச் செய்விக்கப் புலியூர் வாழும்
வித்தகனே யெழுந்தருளி மேன்மையளித் தானென்னின் விளங்குஞ்சைவக்
கொத்தினுக்கே நற்காலங் கூர்ந்ததென மிகவேத்திக் குதிகொள் வோமே.

அங்காளி லமரரெலா மமுதமெழக் கடல்கடைந்த வாகு லத்தாற்
பன்னாளிற் செய்தொழிற்கே பயன்பெற்ற ரெனக்களித்தார் பாரி லுன்
ரிங்காளிற் கல்வியெனு மமுதமுண வலியவரு ளீந்தாட் கொண்ட [ளோ
பொன்னருங் கமலவயற் புலியூரி னிறைவனிரு பூந்தாள் வாழ்க.

வருடோற்சவ பத்திரிகையில் கண்டபடி, சென்னை பாலசுப்ரமண்ய பக்தஜனசபை காரியதரிசி ஸ்ரீ மத் திரு. வி. கல்யாணசுந்தரமுதலியாரவர்களும், சென்னை சிவரகசியப் பதிப்பாசிரியர் ஸ்ரீமத் க. சதாசிவ செட்டியாரவர்களும் தெய்வ கதியால் உபந்யசிக்க நேராமற்போயினும், கலைமகள் கழகத்தின் இரண்டாவது வருடோற்சவம் கலைமகளருளால் யாதொரு குறையுமின்றிச் சம்பூர்த்திபெற்றது.

கருணையேதிரண்டோருருக்கொண்டன்ன நமது ஸ்ரீ ஞானியார்மடாலயத்துச்சுவாமிகளும், அன்பே வடிவமாக விளங்குகின்ற வெளியூர் வித்வ சிரோமணிகளும், எமது வேண்டுகோளுக்கிரங்கி, பிரதி பிரயோஜனத்தை விரும்பாமலும், சரீரப்பிரயாசையைப் பொருட்படுத்தாமலும், கருணை யொன்றே காரணமாக, ஈண்டு விஜயஞ்செய்தருளி, நமது கலைமகள் கழகத்தின் இரண்டாவது வருடோற்சவத்தைப் பூர்த்திசெய்வித்த இவர்களது கருணையை நாம் என்னென்று கொண்டாடுவது!

சுவாமிகளுடைய அற்புதமான பிரசங்கமும், வெளியூர் வித்வ சிரோமணிகளுடைய அருமையான பிரசங்கங்களும், அன்பர்கள் யாவரையும் ஆனந்தக்கடலில் அமிழ்த்திவிட்டன என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இவ்விஜயமானது சுவாமிகளுக்கும், வெளியூர் வித்வான்களுக்கும் ஜீவர்கள்மாட்டுள்ள கருணைப்பெருக்கை நன்றாகக் காட்டுகின்றது. "தக்க பெரியோர் தமக்கியல்பு தாம் பெற்றுள்ள பேறெல்லா மிக்க வுலகம்பெறுக வென வேண்டிக்கோடல்" என்றபடி தாங்கள் அறிந்த உண்மையைத் தம் போற் பிறரும் அறிந்து உய்யவேண்டுமென்றெழுந்த அவர்களது இயற்கையான கருணைக்கு உலகங்கடமைப்பட்டுள்ளது

"கைம்மாறுவேண்டா கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங்கொல்லோ வுலகு" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாக்கின்படி, இவர்களுக்கு யாம் செய்யத்தகும் கைம்மாறு ஒன்றுமில்லையெனினும், " நன்றிமறவேல் " என்னும் ஔவைப்பிராட்டியார் அமுத வாக்கை மனத்திட்கொண்டு, அருளே உருவமாகிய நமது ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச்சுவாமிகளுக்கும், அன்பே வடிவமாகிய வெளியூர் வித்வ சிரோமணி

களுக்கும், மற்றும் அன்பர்கட்கும் எமது மனப்பூர்வமான நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

தி - திருப்புளிசாமி ஐயர்
கழகத்தின் காரியதரிசி.

வாழைப்பழச் சோம்பேறி யார்?

வாழைப்பழச் சோம்பேறியார்? இந்த வினவிற்கு, "செய்யத் தக்க யாதொரு காரியமும் செய்யாமல் மிகுந்த சோம்பலுடைத்தாயிருப்பவர்களேயாம்" எனப்பலர் விடை கூறினர். ஆனால் மிகு சோம்பலுடையாரை "வாழைப்பழச் சோம்பேறிகள்" என்பானேனெனின், அதற்குத்தகுதியான விடை கூறினரில்லை. ஆகவின் இவ்வாக்கியப் பொருளையறியும் வேட்கையால் யான் பலரை வினவி வருகையில் ஒருவயோதிகர் ஓரிதிகாசமூலமாய் விளக்கி வைத்தமை வருமாறு:—

ஒரு சோம்பேறியானவன் வாழைப்பழம் விற்கும்ஒருவனை நோக்கி வாழைப்பழம் என்னவிலை யென்றான். பழக்காரன் காசு ஒன்றுக்குமூன்று பழம் என்றான். சோம்பேறி, உரித்தபழமா? உரிக்காதபழமா? என, பழக்காரன் உரிக்காதபழம் என்றான். சோம்பேறி, உரித்தபழம் என்னவிலை? எனக் கேட்க, காசுக்கு இரண்டு பழம் என்றான் பழக்காரன். ஆனால் உரித்தபழத்தை வாயில் ஊட்டி விடுவதாயிருந்தால் என்னவிலை கேட்பாயெனச் சோம்பேறி கேட்டான். அதற்குப் பழக்காரன் உரித்த பழத்தை ஊட்டிவிட வேண்டுமானால் காசுக்கு ஒரு பழந்தான் கொடுப்பேனென்றான். ஆனால் எனக்கு மூன்று பழம் வேண்டும் ஆனதால் இந்தாரும் மூன்று காசு என மூன்று காசைப் பழக்காரனிடம் கொடுத்து மூன்று பழங்களைப் பழக்காரன் உரித்து வாயில் ஊட்டிவிட உண்டிருந்தான் சோம்பேறி. ஆனதால் யார் தம் மாலியன்ற சிறு முயற்சிகளையுங் கூடச் செய்தலில் சோம்பலுடையாராய் அது காரணமாகத் தம்பொருளழிவையுங் கூடக் கருதாதிருக்கின்றனரோ அவரே வாழைப்பழச் சோம்பேறியெனப் படுவார் என விளங்குகின்றது.

இதனால் வாழைப்பழச் சோம்பேறிகளின் இலக்கணங் கூறியவாறாயிற்று. இனி அவ்விலக்கண முடையார் யாவர் என்பதை விசாரிப்பாம். அங்ஙனம் விசாரிக்கப்புகும்போது இவ்வாக்கியம் ஞாபகத்திற்கு வருகின்றது. அதுயாது? "கொல்லத் தெருவில் ஊசி விற்கின்றாற்போலிருக்கின்றதே" என்பதேயாம். இதன் கருத்து:— ஒரு பொருளைத் தாங்களே செய்து கொள்ளக்கூடியவர்களிடத்து அப்பொருள் விலைபடாதாகலின் அவர்களிடம் அப்பொருளை விற்கச் செல்வது அறியாமையாகும் என்பதாம்.

இந்தப் பழமொழியானது மற்றைப் பழமொழிகளினும் மிக்கபழமொழியாயிருக்கவேண்டும். எதனாலெனின், நம் தேசவாசிகளாகிய கொல்லர்கள் (கருமார்) வீதியில் நீண்டகாலமாய்ப் பிறதேசப்பொருள்களில்ஒன்றாய ஊசிவிற்கப் பெறுவதுமன்றி, அக் கொல்லர்களே பல சமயங்களில் ஊசிக்காகக் கடைகள்தோறுந் திரிவதையுங் காண்பதால், இக்கொல்லர்கள் தம்மால் செய்துகொள்ளக் கூடிய வஸ்துக்களைத் தாங்களே செய்துபயோகித்துக்கொள்வதேயன்றி விலை கொடுத்து வாங்காராயிருந்த நிலைமையினையுடைத்தாயிருந்த காலம் நீண்ட காலத்துக்கு முன்னைய காலமாகவேயிருத்தல்வேண்டும். அக்காலத்தில் தான் ‘கொல்லத் தெருவில் ஊசிவிற்கின்றாற்போல்” என்னும் வாக்கியமும் உண்டாயிருத்தல் வேண்டும். இதனால் கொல்லர்கள் மாத்திரந்தான் தாம் செய்துகொள்ளக்கூடிய பொருள்களைப் பிறர்பால் பொருள் கொடுத்து அடையும் நிலைமையில் வந்து விட்டார்களென்று கருதுதல் கூடாது. நெசவுத் தொழில் செய்யும் கைக்கோளர் முதலிய ஜாதியாரும் அத்தன்மையரே யாயினர். இவர் மட்டோஆராய்ந்து பார்த்தால் அநேகம் கைத்தொழிலாளர்கள் இவ்வகையினரே யாயினர். இதற்குக் காரணம் யாதெனலாம். சோம்பலேயன்றோ. இதுவேயுமன்றி கறியுப்பை வாங்கித் தாங்களே பொடி செய்து உபயோகித்துக் கொள்வதற்குச் சோம்பலடைந்து பொடித்த உப்பை அதிகவிலை கொடுத்து வாங்குபவர்களானார்கள் பலர் எனில்,இவர்களை வாழைப்பழச்சோம்பேறிசளென்று கொள்வதில் குற்றம் யாது. ஒரு தம்பிடிக்கு மூன்று பழம் பெற்றுத்தானே உரித்துத் தின்னச் சோம்பலடைந்து ஒரு தம்பிடிக்கு மூன்று தம்பிடி கொடுக்கச் சம்மதித்த பெருஞ் சோம்பேறியை இவர்களெவ்வகையால் ஒப்பாகார்? இப்படியே சிறு விலைக்குப் பெறக்கூடியவைகளைத் தம் சோம்பல் காரணமாகப் பெருவிலை கொடுத்து வாங்கி வருவாராயின் பெரும் பொருள் நஷ்டமடைந்து “சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்” என்பதற்கு இலக்காவரன்றோ! ஆகலின் இத்தகைய பழிப்பிற்கும் பொருள்நஷ்டத்திற்கும் துக்கத்துக்கும் ஏதுவாகியசோம்பலைக்கைவிட்டு ஊக்கமுடையராய்ப் பெரும் பொருளீட்டிப் பெரும் புகழையும் சுகத்தையும் அடைதலில் முற்படுதல் விவேகிகளின் கடனாம். சுபம்.

இதோபதேசி.

இலக்கியப் பகுதி.

மணிமேகலை

ஆதிரை பிச்சையிட்ட காதை.

[பதினாறாவது மணிமேகலைக்கு ஆதிரையென்னும் பத்தினிப்பெண்டிர் பாத்திரம் ஈந்த பாட்டு.]

அச - கூரு. மயக்குங் கள்ளு மன்னுயிர் கோறலுங்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிழைத்தலு
முறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையி
னல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலு
மல்லறஞ் செய்வோ ரருநர கடைதலு
முண்டென வுணர்தலி னுரவோர் களைந்தனர்
கண்டனை யாகெனக் கடுநகை யெய்தி
யுடம்புவிட் டோடு முயிருருக் கொண்டோ
ரிடம்புகு மென்றே யெமக்கீங் குரைத்தா
யவ்வுயி ரெவ்வணம் போய்ப்புகு மவ்வகை
செவ்வன முரையெனச் சினவா திதுகேள்

இ - ள். "மயக்குகின்ற கள்ளையும் உயிர்களைக் கொல்லுதலையும் அறிவுடையோர் நீக்கிவிட்டனர். இன்னும் கேட்பாயாக; பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும் தூங்குதலையும் விழித்தலையும்போன்றது. புண்ணியம் செய்பவர் நற்கதியடைதலும், பாவம் செய்பவர் நரகத்தையடைதலும் உண்டென்று உண்மையாக உணர்தலினாலே அறிவுடையோர் அவற்றைக் களைந்துவிட்டனர்; அறிந்தாயாகுக" எனச் சாதுவன் சொல்ல,நாகர் குருமகன் பெருஞ் சிரிப்புக்கொண்டு, "உடம்பைவிட்டோடுகின்ற உயிரானது உருக்கொண்டு வேறோரிடத்திற் புகுமென்று எமக்கு இங்கு உரைத்தனை, அவ்வுயிர் எவ்விதம் போய்ப் புகும்? அவ்வகையை நேரேசொல்லுக" என்று வினவ, "கோபங்கொள்ளாமல் இதனைக்கேட்பாயாக" என்றுசொல்லுவானாயினன் சாதுவனென்க.

கயக்கு—கசங்குதல்."பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும்" என்றற்றொடக்கத்து வாக்கியம் "உறங்குவதுபோலுஞ் சாக்கா டுறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு" என்ற திருக்குறளின் கருத்தைத் தழுவியது. அல்லற்ம்—அறமல்லாதது; பாவம். உரவோர்—அறிவுடையோர்.

கூசு - ககஎ. உற்றதை யுணரு முடலுயிர் வாழ்வுழி
மற்றைய வுடம்பே மன்னுயிர் நீங்கிடிற்
றடிந்தெரி யூட்டினுந் தானுண ராதெனி
னுடம்பிடைப் போனதொன் றுண்டென வுணர்நீ
போனார் தமக்கோர் புக்கிலுண் டென்ப
தியானோ வல்லே னியாவரு முணர்குவ
ருடம்பீண் டொழிய வுயிர்பல காவதங்
கடந்துசேட் சேறல் கனவினுங் காண்குவை
யாங்கனம் போகி யவ்வுயிர் செய்வினை

பூண்ட யாக்கையிற் புகுவது தெளிநீ
யென்றவ னுரைத்தலு மெரிவிழி நாகனு
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
கள்ளு மூனுங் கைவிடி னிவ்வுடம்
புள்ளுறை வாழுயி ரோம்புத லாற்றேன்
றமக்கொழி மரபிற் சாவுறு காறு
மெமக்கா நல்லற மெடுத்துரை யென்றலு
நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
யுன்றனக் கொல்லு நெறியற முரைக்கே
னுடைகல மாக்க ளுயிருய்ந் தீங்குறி
னடுதொழி லொழிந்தவ ராருயி ரோம்பி
மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டுந்
தீத்திற மொழிகெனச் சிறுமக னுரைப்போன்

இ - ள். "உயிர் உடம்போடு வாழுமிடத்து உடம்பு உற்றதை யுணரும்; அவ்வுடம்பே உயிர் நீங்கிவிடில் வெட்டித்தீயிற் சுடப்படினும் ஒன்றையும் உணராது எனப் படுமானால், உடம்பினிடத்து நீங்கியதோர் பொருள் (உயிர்) உண்டென நீ உணர்வாயாக; அங்ஙனம் போயின உயிர்கட்கு ஓர் புகுமிடம் உண்டென்பதை யான் மாத்திரமோ அறியவல்லேன், யாவரும் அறிகுவர்; உடம்பு ஈண்டுக் கிடந்தொழிய, உயிரானது பலகாதங்கடந்து நெடுந்தூரம் செல்லுதலைக் கனவினிடத்துங் காண்குவை; அவ்விதம் சென்று அவ்வுயிர் செய்வினையைக்கொண்ட உடம்பினிடத்தே வந்து புகுதலை நீ தெளிவாயாக" என்று சாதுவன் கூறுதலும், தீப்போலும் சிவந்த கண்களையுடைய அந்நாகனும், தருமங்களையறிந்த சாதுவனது கால்களில் வீழ்ந்து, "கள்ளையும் மாமிசத்தையும் கைவிட்டால் இவ்வுடம்பினிடத்து வாழும் உயிரைப் பாதுகாத்தல் செய்யகில்லேன்; இறக்கும் வரையிலும் தமக்கென்றே தீர்ந்த முறைமையினையுடைய எமக்காகிய நல்ல தருமத்தை எடுத்துச் சொல்லுக" என்றனன். என்றலும், சாதுவன் "நல்லவார்த்தைகளைச் சொல்லினை, நீ நல்லவழியிற் செல்லுவாய்; உனக்கியலும் வழியில் தருமத்தைச் சொல்கின்றேன்: கப்பலுடையப் பெற்ற மனிதர்கள் உயிர் பிழைத்து இவ்விடம் வந்தால் அவர்களைக் கொல்லுந் தொழிலை விட்டு அவர்களுயிரைப் பாதுகாத்து, முதுமையுற்று இறக்கும் விலங்குகளைத் தவிர்த்துமற்றெல்லாவுயிர்களிடத்துங்கொலையைச்செய்யாதொழிவாயாக' என்று சாதுவன் சொல்ல, அறிவிற் சிறியவனாகிய குருமகன் கூறுவானென்க.

புக்கில்—புகுமிடம். காவதம்—காதம் "ஒல்லும் வகையா னறவினை யோவாதே செல்லும்வா யெல்லாஞ் செயல்" என்ற திருக்குறளிற்கேற்க, "உன்றனக்கொல்லு நெறியறமுரைக்கேன்" என்றார். தீத்திறம்—கொலை.

ககஅ-கஙரு. ஈங்கெமக் காகு மிவ்வறஞ் செய்கே
மாங்குனக் காகு மரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டுங் கலங்கவிழ் மாக்களை
யுண்டே மவர்த முறுபொரு ளீங்கிவை
விரைமர மென்றுகில் விழுநிதிக் குப்பையோ
டிவையிவை கொள்கென வெடுத்தனன் கொணர்ந்து
சந்திர தத்த னென்னும் வாணிகன்
வங்கஞ் சேர்ந்ததில் வந்துட னேறி
யிந்நகர் புகுந்திங் கிவனொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமுஞ் செய்தன
ளங்கன மாகிய வாதிரை கையாற்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென
மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா வோவியம் போல நிற்றலுந்
தொழுது வலங்கொண்டு துயர றுகிளவியோ
டமுத சுரபியி னகன்சுரை நிறைதரப்
பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
வாதிரை யிட்டன ளாருயிர் மருந்தென.

இ - ள். "இங்கு எமக்காகிய இத்தருமத்தை யாம்செய்வேம், அங்கு உனக்கு வேண்டிய அரிய பொருள்களைக்கொள்க" என்று கூறி, "முன்னும் அதற்கு முன்னும் மரக்கலம் உடையப்பெற்ற மனிதர்களைக்கொன்று புசித்தேம்; அவர்களது மிகுந்த பொருள்களாகிய சந்தனம் அகில் மெல்லிய ஆடைகள் சிறந்த நிதிக்குவியல்கள் இவையிவை பெற்றுக்கொள்க" என்று கொடுக்க, சாதுவன் அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டுவந்து, அங்குவந்து சேர்ந்ததாகிய சந்திரதத்தனென்னும் வர்த்தகனது கப்பலில் வந்து உடனே ஏறி இந்நகர்க்கு வந்து இவ்வாதிரையுடன் கூடி வாழ்ந்து தனது வீட்டிலிருந்து சிறந்த பல தானங்களும் செய்தான்; அத்தன்மையையுடையவளாகிய ஆதிரையின் கையால், பூங்கொடிபோலும் அழகிய மணிமேகலை! பிச்சைபெறுவாயென்று காயசண்டிகை சொல்லினள்; சொல்லுதலும், மணிமேகலையானவள் ஆதிரையின் வீட்டிற் புகுந்து,வண்ணங்களைக்கொண்டெழுதாத வடிவைக்கோட்டின சித்திரம்போல நின்றனள்; நிற்றலும், ஆதிரை தொழுது வலங்கொண்டு துயர்தவிர்க்கின்ற வார்த்தைகளோடு அமுத சுரபியென்னும் பிக்ஷா பாத்திரத்தின் அகன்ற குழிந்த பாகம் நிறையும்படி, "உலக முழுவதும் பசிநோய் நீங்குக" என்று அன்னம் இட்டனள் என்க.

விரைமரம்—சந்தனம் அகில் முதலியன. வங்கஞ்சேர்ந்ததில்—சேர்ந்த கப்பலில். பிச்சை வாங்கும்பொழுது துறவறத்தினர் மௌனமாக நிற்க

வேண்டுமென்பது விதியாதலின் "புனையாவோவியம் போல்நிற்றலும்" என்றார். செயற்கையழகு யாதொன்றுமின்மையின் புனையாவோவியம் என்றார். சுரை—ஈண்டுப்பாத்திரத்தில் உள்ளீடில்லாதுகுழிந்தபாகம். ஆருயிர்மருந்து—அன்னம்.

ஆதிரை பிச்சையிட்ட காதை முற்றிற்று.

பத்திராதிபர்.

மயிலைச் சிலேடை வெண்பா.

பேதஞ்சொல் வோரிடத்தும் பீடார்பூங் காவிடத்தும்
வாதங்க ணேரு மயிலமே—சீதமுடி
ஆண்டலைக்கொ டிக்கத்த னன்புறுசேய் செஞ்சூட்டார்
ஆண்டலைக்கொ டிக்கத்த ரூர்வு.

(இ - ள்.) பேதம் - வேற்றுமையாக, சொல்வோரிடத்தும் - பேசுவோரிடத்திலும், வாதங்கள் - தருக்கங்கள், நேரும் - சம்பவிக்குஞ் சிறப்பினையும், பீடு - பெருமை, ஆர் - பொருந்திய, பூங்காவிடத்தும் - பூஞ்சோலைகளினும், வாதம் - தென்றற்காற்றும், கள் - தேனும், நேரும்-கிட்டியிருக்குஞ் சிறப்பினையுமுடைய, மயிலமே - மயில மலையே, சீதம் - குளிர்ந்த, முடியாண்டு - முடியினவ்விடத்து, அலைக்கொடி-கங்கையாகிய பெண்ணையுடைய ,கத்தன் - சிவபெருமான், அன்புறு - அன்புபொருந்திய, சேய் - புத்திரரும், செம் - சிவந்த, சூடுஆர் - உச்சிச்சூட்டினையுடைய, ஆண்டலைகொடிக்கு - கோழிக்கொடிக்கு, அத்தன் - தலைவருமாகிய முருகக்கடவுளுக்கு, ஆர்வு - பொருந்துமிடமாம். எ - று.

ஆண்டு - இடப்பொருளில் வந்தது. அலை - அதனையுடைய கங்கைக்காயினமையின் ஆகுபெயர். (௯)

கானவர்மா வெய்யவில்விற் கண்ணிவந் தேவலத்தில்
வானம் பணியு மயிலமே—ஞானமுற்றோர்
மண்பூண் டரித்தார் மதுரையினில் வாதுசெய்ய
மண்பூண் டரித்தார் மலை.

(இ - ள்.) கானவர் - வேடர்கள், மா - மிருகங்களை, எய்ய - (சொல்லும்படி) விடுவதற்கு, வில்வில் - சிலையில், வான் - பெரிய, அம்பு-பாணத்தை, அணியும் - பூட்டுஞ்சிறப்பினையும், கண்ணி வந்து - கருதிவந்து, வலத்தில் - வலப்புறத்திலிருந்து, வானம் - தேவர்கள், பணியும் - வணங்குஞ்சிறப்பினையுமுடைய, மயிலமே - மயிலமலையே, மண் - மாட்சிமையுடைய, பூண்- ஆபரணங்களை, தரித்தார்-அணிந்தவரும், மதுரையினில்-திருவாலவாயில், வாதுசெய் - வாதஞ்செய்த, அமண்பூண்டு - சமணர்களாகிய பூண்டுகளை, அரித்தார் - வேரோடுகளைந்தவரும், ஞானமுற்றோர் - திருஞானசம்பந்தசுவாமியும் ஆகிய முருகக்கடவுளுக்கு, மலை - மலையாகும், எ - று.

"பூருவதிசைநோக்கும் புனிதன் முன்வலப்பாணிற்க" என்றமையால்,
வலத்தில் வானம்பணியுமென்றும். வானம், இடவாகுபெயர் - "காழியிலே
வந்து கணக்கிலாச் சிவரை நீ, மேழியின்பத்துய்த்த வொருவனே, ஆழியெ
னுங், தன்பத்திருந்தேனைத் தூக்கித்தென்போரூரா, வின்பத்துள்வைப்பா
யினி" என்று திருப்போரூர்ச்சந்நிதிமுறையில்அருளிச்செய்தபடி ஸ்ரீமுரு
கக்கடவுளே ஞானசம்பந்த மூர்த்திகளாக அவதரித்தனரென்பதறிக. (எ)

அ - அ - பெரியசாமிப்பிள்ளை.

சாத்திரப் பகுதி.

மங்கலம்.

(தொடர்ச்சி.)

அற்றேற் பொருண்மங்கையானவண் மகாநிகளால் விரிந்தின்பீ
வள் எனிலோ? உண்மையே; ஹிம்சை, பொய், உலோபம் முதலானதோஷ
சர்ப்ப விஷவேக விகசிதத்தையாற்று மிராஜ்ய தன இலாபாதிய பயன்கட்
குக் காரணமாய போர் சூது வாணிபாதிய அவ்வத்தொழில்களால் விரிந்தி
றுமாப்பளென்பதை நினைந்து கோடாதொழிந்தே விடலாமோ! அன்றி
யும், மகமுதலியன தனச்சேதத்திற்கேதுவெனவும்அதனினுளதாமின்பமற்ப
மேயன்றி யழிதலுமா மென்பதையு மறியாதார்தாம் யார் கொல்!

மேலாய பெருங்காலாற்ற கினமானது பங்கப்படுத்தப்படுமோ போற்
றிருமகளாற் பங்கப்படாவரை அன்னியன் பாலும் தன்னவன் பாலும்
விவேகியானவன் நேயதயாதிசளோடுங்கூடிக்குலவி யிலங்குகின்றனனன்
றோ.

மேலும், அரதனமானது மட்டோளான் மலினமடைவதை மானும்
அறிஞரும், அதிசூரரும், நன்றிகுன்றாரும், மனதிற்கினியாரும் தனுங்
கனையாற்றடைப்படாதடைவர் தாமலினமென்ப. விடக்கொடி மாய்வைவீ
வதொப்பப்பொருட்கொடி அரக்கைப் பொருட்டே வாளா வளர்ந்து அழி
வையளிப்பளென்பதி லியாதுதானையமோ.

பொன்மங்கையைப் போற்றுவாருட் சிலர் தன்மங்கீர்த்தியாதி
வன்மையராய்ப் பொலிகின்றனரே யெனக் கடாவின்? உலகாசவிகழாப்
பாக்கிய முடையானுண்டுகொல்! வீரவாதம் வாதியாச் சூரனுமுளன்
கொலோ நேர் நோக்குற்றதோர் சிராய பிரபு வுண்டாங்கொல்! என்க; அன்
றியும்,

146

மகாவிடம வித்த மாதானவள், அரந்தைமய அராக்கட்குத்திரந்தரி முழையாயும், திரமோகமாகும் பெரிதாங் கரிகளுக் கரியதோர் விந்தியக் கிரியினதான வரும்பெரிதாமெழிற் றூழ்வரையாயும், அறக்கருமங்களாமந் தாமரைக்கோர் வரக்கலைமதி நிகழ் சிறக்கிரவாகியும், துன்பமா மாம்பலுக் கின்ப நிலவாகியும், கருணை நன்னோக்காங் கதிரொறிதீபக் கொருபெருங் காலா யுலவியுங் குலவியும், பல பல விகற்பமாம் பயிர்களுக்கிடமாம் பழரச நிறைந்த கழனிகளாகியும், வைராகமான வாடாக்கொடிகளுக் கயராப்பனி யாயந்தோவாகியும், காமமேமுதலாங் கழிவிகாரங்களையாமுலூகங்களுக் கன்னிசியாயும், விவேகமேயாகுந் தவாதசீர் மதிக்கு மாற்றூராகுவி னீற் றெயிறூகியும், இலக்கியே வாழுமிலங்கிழையன்றே.

(இன்னும் வரும்.)

வீர - சு.

நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

15 - **மார்ஜால நியாயம்**:— மார்ஜாலம்-பூனை, நியாயம் - திருஷ்டாந்தம். இது வலியுளானொருவன் வலிதினிற் சென்று வலியிலானொருவனை வலியுளானுக்கி வலிந்தாட் கொள்ளலிதுபோல வென்கின்றது. அதாவது: பாலுண்ணல், பல்லிடஞ் சேறல் முதலியவற்றில் தானே பிரவர்த்தித்தலில் சாமர்த்தியமின்றிய பூனைக்குட்டியைத் தாய்ப்பூனையானது தானே வலுவிற்சென்று பாலூட்டல், பல்வேறிடங்களில் கொண்டு சென்றிருத்தல் முதலிய உபகாரங்களைச்செய்து காப்பதுபோல வென்பதாம்.

16 - **மர்க்கட நியாயம்**:— மர்க்கடம் - குரங்கு, நியாயம்—திருஷ்டாந்தம். இது வலியிலானொருவன் வலியுடையொருவனை விடாது பின்பற்றிச் சென்றுபயனுறுதலிதுபோல வென்கின்றது. அதாவது: கிளைகளில் தாவிச்சென்று கனிகளை நுகரச் சக்தியின்றிய குரங்குக் குட்டியானது, சக்தியுள்ள தாய்க்குரங்கை விடாது பிடித்துக்கட்டிக்கொண்டு சென்று கனிகளை நுகர்வதுபோல வென்பதாம்.

17 - **பீஜாங்குர நியாயம்**:— பீஜம் - விதை, அங்குரம் - முளை, நியாயம் - திருஷ்டாந்தம். இது ஆதியில் காரணம் ஈதேயெனத் துணிதற் கிடனின்றியிருத்தலிது போல வென்கின்றது. அதாவது: வித்துமுந்தியா? மாம் (முளை) முந்தியா? என்புழி வித்தின்றிமாமும், மாமின்றிவித்தும் உண்டாதற்கு நியாயமின்மையின் இவற்றில் இதுதான் முந்திய காரணமெனத் துணிதற்கிடனின்றியிருத்தல்போல வென்பதாம்.

18 - கமலபத்ரோதக நியாயம்:— கமலபத்ரம்-தாமரையிலை, உதகம் - தண்ணீர், நியாயம்-திருஷ்டாந்தம். இது ஒருகாரியத்தில் சம்பந்தப்பட்டிருப்பதுபோல் பிறர்க்குக் காணப்படினும், பற்றற்றேயிருப்பவர் தன்மை யிதுபோலவென்கின்றது. அதாவது: தாமரையிலையில் ஜலமானது பொருந்தியேயிருப்பதாய்க் காணப்படினும், அதில் ஜலம் பற்றாதேயிருப்பதுபோல வென்பதாம்.

19 - அஸ்தா மலக நியாயம்:— அஸ்தம் - உள்ளங்கை, ஆமலகம்-நெல்லிக்கனி, நியாயம் - திருஷ்டாந்தம். இது யாதொரு விஷயம் நிஸ்ஸந்தேகமாய் விளங்குகின்றதோ அது இதுபோல வென்கின்றது. அதாவது: உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனியானது எப்படிச்சந்தேகமின்றியறியப்பட்டிருக்கின்றதோ அதுபோல வென்பதாம். இதனை அஸ்த அமலகம் எனப்பிரித்து உள்ளங்கையிலுள்ள நிர்மல ஜலம்போல என்பாருமுளர்.

20 - சாகா சந்திர நியாயம்:— சாகா - கிளை, சந்திர: - பிறை, நியாயம்-திருஷ்டாந்தம். இது சூக்ஷ்மவஸ்துதரிசனத்திற்கு ஸ்தூலவஸ்து தரிசனம் சாதகமாத லிதுபோல வென்கின்றது. அதாவது: சூக்ஷ்மமாகிய மூன்றாம் பிறையைத் தரிசிப்பதற்கு முதலில் ஸ்தூலமாகிய கிளையைக் காட்டிப் பிறகு அக்கிளையின் நுனியைக்காட்டி அநந்தரம் அந்நுனிக்கு நேராய்ப் பார்க்கச் செய்து சூக்ஷ்மமாகிய பிறையைத் தரிசிப்பித்தல்போல வென்பதாம்.

பிழை திருத்தம்.

கலைமகள் வெண்டாமரை-க, இதழ் - ரு, பக்கம் - கஅ-ல், பிரசுரமான காகாக்ஷி நியாயத்திலுள்ள "நின்று" "இருந்து" என்னும் பதங்களை "சென்று" எனத் திருத்திக்கொள்ளல் வேண்டும்.

(இன்னும் வரும்.)

அநந்தபத்மநாப ஸ்வாமி
காஞ்சீபுரம்.

சுஜன சம்வாதம்.

ஒரு நல்ல கப்பல்

(முன் தொடர்ச்சி.)

கோற்றன். அன்ப, எனக்கு யாதோர் ஆயாசமுமின்று. ஆகலின் உனக்குப்பிரசங்கமத்தியில் உண்டாகாநின்ற ஆசங்கைகளைநன்றாய் நிவர்த்திக்துக் கொள்வாயாக.

சாத்தன். ஆயின் ஐயனே, இலக்ஷணத்தில் சொல்லப்பட்ட "துஷ்டம்" என்பதியாது?

கோற்றன். அன்ப, அவ்வியாப்தி, அதிவியாப்தி, அசம்பவம் என்பன இலட்சணத்தில் தோஷங்களாம். இவற்றில் யாதானுமோர் தோஷத்தையுடைத்தாயிருப்பினும் அந்த லக்ஷணம் துஷ்ட லட்சணமெனப் படும்.

சாத்தன். அவ்வியாப்தி என்பது யாது?

கோற்றன். தனது இலட்சியத்தின் ஏகதேசத்தில் இராத இலட்சணம் யாதோ அது அவ்வியாப்திக்குற்றமுடைய இலட்சணமாம். எங்ஙனம்: 'ஆ'கபிலநிறமுடையது என ஆவிற்குக் கபிலநிறமுடைமைவடிவ இலட்சணம் ஒருவன் கூறின் அக்கபிலநிறமுடைமைவடிவ லட்சணம் அவ்வியாப்திக்குற்றமுடையதாம். எற்றுக்கெனின், அக்கபில நிறமுடைமைவடிவ லட்சணம் தனது இலக்ஷ்ய வடிவமான எல்லா ஆக்களிலுமிருப்பதில்லை. ஆனால் சில ஆக்களிடத்தே அக்கபிலநிற முடைமை இருக்கின்றது; ஆகையால் இலட்சியத்தின் ஏக தேசத்தில்லாமை பற்றி அக்கபிலநிறமுடைமை வடிவ இலக்ஷணம் அவ்வியாப்திக் குற்றமுடையதாம்.

சாத்தன். அதிவியாப்தி என்பதுயாது?

கோற்றன். தனது இலட்சியத்திலிருப்பதாயும், அலக்ஷியத்திலிருப்பதாயுமுள்ளது யாதோ அவ்விலக்ஷணம் அதிவியாப்திக்குற்றமெனப்படும். எங்ஙனம்: '"கோடுடையது ஆ" என்னும் இலக்ஷணம் ஒருவன் கூறின் அக்கோடுடைமை வடிவ இலக்ஷணம் ஆவிற்கு அதிவியாப்திதோஷமுடையதாம். எற்றுக்கெனின் எங்ஙனம் ஆக்கள் கோடுடையனவாமோ, அங்ஙனமேஎருமை ஆடுமுதலியனவும் கோடுடையனவாம். ஆகையால் கோடுடைமைவடிவ லக்ஷணம் தனது லக்ஷியவடிவ ஆக்களிலிருந்து கொண்டு அலக்ஷியவடிவ எருமை, ஆடு முதலியவைகளிலுமிருக்கின்றதாகையால் இக்கோடுடைமை வடிவ லக்ஷணம் அதிவியாப்தி தோஷமுடையதாம்.

சாத்தன். அசம்பவம் என்பது யாது?

கோற்றன். தனது இலட்சியத்திலேயே இல்லாதது யாதோ அவ்விலட்சணம் அசம்பவக்குற்றமுடையதாம். எங்ஙனம்: ஒருவன் "ஒற்றைக் குளம் புடையது ஆ" என ஒற்றைக் குளம்புடைமை வடிவ லட்சணத்தை ஆவிற்குக் கூறின் அது அசம்பவதோஷ

முடையதாம். ஏனெனின், ஓராவினிடத்தும் ஒற்றைக்குளம்பு சம்பவிக்கின்றதில்லை. எல்லா ஆக்களின் பாதங்களில் இரட்டைக் குளம்புகளேயிருக்கின்றன. குதிரை, கழுதை முதலியவைகளிடத்தேயே ஒற்றைக் குளம்புகளிருக்கின்றன. ஆகையால் அவ்வொற்றைக் குளம்புடைமைவடிவ 'ஆ' வின் லட்சணம் தனது லட்சியமாத்திரத்து இல்லாமையால் அதாவது தனது இலட்சியமாகிய எல்லா ஆக்களிலுமில்லாமையால் அசம்பவக் குற்றமுடையதாம்.

இவ்விதமாகக் கபிலநிறமுடைமை, கோடுடைமை, ஒற்றைக் குளம்புடைமையாகிய இம்மூன்றும் முறையாக அவ்வியாப்தி, அதிவியாப்தி, அசம்பவம் ஆகியமுக்குற்றங்களுடையதாவதால் தனது இலக்ஷியவடிவ ஆவின் சித்தியைச் செய்வதில்லை.

சாத்தன். ஐயனே, வேறு எந்த லட்சணத்தால் 'ஆ' வின் சித்தியாமோ அதனைச் சொல்லி யருளல்வேண்டும்.

கொற்றன். "களகம்பளம், (அலைதாடி) கோடு இவைகளையுடையது ஆ" என்னும் இந்த லக்ஷணம் 'ஆ' வடிவ தனது லக்ஷியத்தைச் சித்தி செய்கின்றது. இந்த லக்ஷணத்தில் கோடுடைமையையும் சேர்த்துக் கூறுவதால் அலைதாடியுடைய கோழி முதலியவைகளிடத்து அதிவியாப்தியுண்டாகாது. அலைதாடியுடைமையைச் சேர்த்துக் கூறுவதால் அஃதின்றிய கோடுடைய எருமையாதிகளிடத்து அதிவியாப்தியுண்டாகாது. ஆகலின் "அலைதாடியும் கோடும் உடையது ஆ" என்னும் இது சத்லக்ஷணமெனப்படும்.

(இன்னும் வரும்.)

ஆ - செங்கல்வராயமுதலியார்

காஞ்சீபுரம்.

சற்றுப் பொறு.

"சற்றுப் பொறு" என்னும் இது அவசரப்படாதே என்னும் எதிர்மறைப் பொருளினையுடையதோர் வாக்கியம். இதனை எல்லாக்காரியங்களிலும் அநுசரிக்கவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். அவர்தங் கருத்துக்கிணங்க "பொறுமை கடலிலும் பெரிது" "ஆய்ந்தாய்ந்து பாராதான் காரியந் தான்சாந்துயரந் தரும்"

என்பதாதி வாக்கியங்களைப் பிரமாணமாகவுங் காண்பிக்கின்றனர். ஆனால் கடலைக்கையால் நீந்திக்கரையேறினதுபோல் அருமையாகியமனித

150

சரீரம் பெற்றுள்ள நம்மநுபவத்திலோ அப்படியில்லை. ஆனால் மனோவாக்குக் காயங்களாற் செய்யவேண்டிய பல காரியங்களிற் சிலவற்றைச்சற்றுப் பொறுமை (தாமதம்) யாகவும், சிலவற்றை யங்ஙனமின்றி யதிதுரிதமாகவுஞ் செய்து வருகின்றோம். எங்ஙனமெனில்? மண் கல் முதலியவற்றால் புதிதாயோர் வீட்டைக் கட்டினவன் அதிற் கிருகப்பிரவேசஞ் செய்வதற்கு உத்தமமாகிய வோர் நன்னாள்வரும் வரையிற் பொறுக்கிறான். அதே வீட்டை யக்கினி சூழுமானால் அரைக் கணமும் பொறுத்தலின்றிச் சலத்தாலதையணைக்கிறான். உபாயமாகவும் அதிக அபாயமாகவுமுள்ள இரண்டு நோயாளிகள் ஏககாலத்தில் ஓர் உத்தமவைத்தியரையடைந்தால் அவரவ்விருவர்க்கும் முறையே சற்றுப் பொறுமையாகவும் அதி துரிதமாகவுமே மருந்தளித்துப் பிணியை மாற்றுகிறார். இதுபோன்றே யேனைய காரியங்களையுமறிந்து கொள்க.

இவ்வாறன்றி அவசரமாய்ச் செய்யவேண்டியதைப் பொறுமை (தாமதம்)யாயும், பொறுமையாய்ச் செய்யவேண்டியதை யவசரமாயுஞ் செய்வோமாகில் நமக்கு மிகுந்த துன்பமேயுண்டாகும். கூரையிற்றீப்பிடித்திடின் அதனையணைப்பதிற் றாமதிப்பதும், பருமுதலியவை பக்குவப்படுதற்கு முன் சஸ்திரம் (கத்தி) இடுதலி லவசரப்படுதலும் துன்பத்திற்கிடமென்பதை யறியாதார் யாரே.

ஆகலின் பகுத்தறிவுடைய மக்களியாவரும் தாங்கள் செய்யவேண்டிய சகல (இகத்திற்குவேண்டிய வுழவாதிகள், பரத்திற்குவேண்டிய யாகாதிகள், மோக்ஷத்திற்குவேண்டியசிரவணாதிகள்) காரியங்களையும் தக்கார்பால் வினவிப் பொறுமையிற் செய்யவேண்டியதைப் பொறுமையாயும் துரிதமாய்ச் செய்யவேண்டியதைத் துரிதமாயுஞ் செய்யக்கடமைபூண்டவர்களேயொழிய "எல்லசெட்டிலெக்க ஏகலெக்க" என்றெல்லாக் காரியங்களையும் ஒரே படித்தாய்ப் பொறுமையாகவாவது, துரிதமாகவாவது செய்யவேண்டியவர்களன்றாம்.

தேவரானும் மூவரானும் யாவரானுமிவ்வளவுதான் ஆழமென்றளவிடற்கரிய ஆசையென்னுஞ் சலமும், அதினின்றெழுந் துக்கபரம்பரையாம் ஒழியாதவலைகளும், அத்துக்கங்களே மாறுவேடங் கொண்டுள்ள விடய சுகங்களாம் பலகுமிழிகளும், குமிழிகளாகிய வவ்வற்ப சுகங்கட்கே அங்காந்தலையும்பஞ்சேந்திரியங்களென்னும் பற்பல விதமானமச்சங்களும், சத்தாதி விடயங்களைச் சதாகாலமும் பிடித்து விழுங்கிக்கொண்டலையும் மனமென்னும் பெரிய முதலையும், இரத்தமாமிச மலமூத்திராதிகளை யானென் றபிமானித்து என்னுடையதென் றெங்நேரமுமரசுபுரியும் அகங்காரமென்னுந் திமிங்கிலமும், தேகாதிகளைத் திகுதிகுவென் றெரித்துக்கொண்டெழும்புங் கோபமென்னுங் கொடிய வடவைக்கனலும், பிற

ருயர்வுகண்டு சகியாது அதைப்பிளக்கச் சோறுபோற் பொங்கிவழியும் பொருமையென்னும் பொல்லாதஅட்டைகளும், பிறாது குணத்தை விட்டுக்குற்றமேதொட்டுக்கொண்டானடிக்குங்கோடானுகோடி கொடும்பாம்புகளும், யாமேபெரியரெமக் கிணையாரென் றடக்கமின்றியிறுமாந்திருக்கும் மதமென்னும் பெரியமலைகளும், கண்டனவெல்லாம் பொய்யென்றுள்ளத்திற் சகலகாதலையும் விட்ட பண்டிதராஞ்சுந்தரஞானியர் தீரர்முதலியோர்களையுந் துரும்புபோற் சுழற்றும் பெண்டிரென்னும் பெருஞ் சுழல்களும், நிறைந்துள்ள சம்சாரமென்னும் சாகரத்தில் விழுந்து தத்தளிக்கும் சீவகோடிகளாகிய நாம் இத்தகைய சமயத்தில் சற்றுப்பொறுத்துச்செய்வதும், உடனே செய்வதுமாகிய காரியங்களெவை யென்று வேதாகமரீதியாய் விசாரித்தால் இம்மகா கொடிய சம்சாரசாகரத்தைத்தாண்டுவதே (சாக்ஷாத்கார ஆந்தர நிருவிகற்ப சமாதி ஜன்னிய ஞானப்பிராப்தியே) சற்றும் பொறுத்திராது தக்ஷணஞ் செய்யவேண்டிய சத்காரியமென்றும், ஏனைய காரியங்களை யெல்லாம் சற்றுப்பொறுமையாய்ச் செய்யினும் பாதகமின்றென்றும் விளங்குகிறது.

ஆதலாற் புல்லாதி ஆறு கடலையும் நீந்தி ஏழாவது கடலாகிய இவ்வரிய மானிடப் பிறவியைப் பெற்றுள்ள நாம் இதர காரியங்களையே துரிதமாய்ச் செய்துகொண்டுஇவ்வேழாவது கடலைத் தாண்டுதற்குரிய காரியங் (சிரவணாதி) களிற் பொறுமையாயிருப்போமாயின் புண்ணிய பாப வசப்பட்டு மீண்டு மீண்டுஞ் சம்சாரக்கடலில் விழுந்து நீந்தவேண்டிவரும். அங்ஙனமாய கொடுந்துயரை நாமடையாது சற்கருமங்களென்னுங் கட்டுமரங்களினாலும், பக்தியென்னும் படகினாலும், ஞானமென்னும் நாவாயினாலும் இன்றேயிப்போதே யிவ்வேழாவதாகிய சம்சாரக்கடலைத்தாண்டி அக்கரை சேர்ந்து அப்பிரதிபந்த வபரோக்ஷ சாக்ஷாத்கார நிரதிசயானந்தமென்னும் நித்திய முத்தியைப் பெறுமாறு எல்லாம் வல்லவிறைவனைச் சொல்லான் மனத்தாற் றுதிசெய்வோமாக. ஓம். சுபம்.

கவி - (ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள்.)

துன்பவெம் பிறப்பி னிழிவையு மழியாச்
சுகபர வீட்டுயர் வினையும்
பின்பவை தொலைத்தெய் தருங்கரு வியதாப்
பெற்றவிப் பிறப்பையு மிதனின்

மின்புரை நிலையா மெய்யையுமோர்ந் தனனோர்
விவேகியுமெனிற்பினும் விடயத்
தன்புறு வீடு புகமிக விரையா
தரைக்கணந் தரைக்கணுற் றிடுமோ.

ஆ. செங்கல்வராயமுதலியார்.
காஞ்சிபுரம்.

சமாசாரம்.

புதுவைச் செந்தமிழ்ப்பிரகாச சபையில், பிரமாதீச ௵ வைகாசி ௴ கசு - உ முதல் கஎ - உ வரையில், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச்சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் திருவாவடுதுறையாதீன சைவப் பிரசாரகர் தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்களால் 'சித்தாந்தம்' என்னும் விஷயமும், திருக்கோவலூர் சைவசித்தாந்த சபை காரியதரிசி ஸ்ரீ ம. ரா. குமாரசாமிப்பிள்ளையவர்களால் 'கடவுள் வழிபாடு' என்னும் விஷயமும், பரங்கிப்பேட்டை கவர்ன்மெண்ட் பெண்பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ முத்தையமுதலியாரவர்களால் மெய்ப்பொருள்நாயனார் சரிதமும் உபந்நியசிக்கப்பட்டன. அக்கிராசனம் அமர்ந்தருளிய சுவாமிகளும் அப்பூதியடிகள் சரிதமும், சீதா கல்யாணமும் பிரசங்கம் செய்தருளினார்கள். அன்பர்கள் கேட்டு ஆநந்த பரவசமுற்றனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

புதுவைக் கலைமகள் கழகத்திற்கெழுந்தருளி, பிரசங்காமிர்தவருஷம்பொழிந்தருளிய ஸ்ரீ ஞானியார்மடாலயத்துக் கருணை மேகமானது, புதுவைச்செந்தமிழ்ப்பிரகாச சபையிலும், தெலாசுப்பேட்டையிலும் தேன்மாரிபொழிந்துவிட்டு, இப்போது முத்தியாலுப்பேட்டையில் அமிர்தவருஷம் பொழிகின்றது. அவ்வமிர்தமழை பொழியப்பெறும் பாக்கியத்தை இனிக்கதிர்காமம் பெறும்போலும். மற்றது பின்னரே தெரியவேண்டும்.

ஏஜண்டுகள் தேவை.

கலைமகள் பத்திரிகைக்கு 100 சந்தாதாரர்களைச்சேர்க்கும் ஏஜண்டுகளுக்கு ரூபாய் 10 கமிஷன் கொடுக்கப்படும். அங்ஙனம் சேர்க்கப்படும் சந்தாதாரர்கள் தமது சந்தாவை முற்பணமாகப் பத்திராதிபருக்கே நேராக அனுப்பிவிடவேண்டும்.

ப - ர்.

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி - சுப்பராய், ஆயுர்வேத
ஔஷதசாலை.

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

7. **நேத்திர பிந்து:**—கண்ணோய், கண் குற்றல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளின் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணாடிபோட வேண்டியது அனாவசியம். சீசா 1-க்கு விலை அணா - 8, வி. பி. சிலவு 1 - முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

8. **கர்ணபிந்து:**—காதில் சீழ்வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளை குணமாக்கும். செவி நன்றாய் கேட்கும். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

9. **சர்வபடை சம்ஹாரன்:**—இடுப்பு, தொடையின் இடுக்குமுதலிய இடங்களில் உண்டாகி, ஓயாத நமச்சலைத்தந்து, வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும், மேகப்படை, சொரி, சிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1 - க்கு விலை அணா 4. வி. பி. சிலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

10. **பேதி மாத்திரைகள்:**—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள், சகல வாயு, மலச்சிக்கல், அக்கினி மாந்தம், வாதம், கை, கால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

11. **ஜ்வர சம்ஹார[illegible]**—தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர் சுரம், முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்தி சுரம், மாலை சுரம், மார்வலி,

காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்பு வெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலாமுறை சுரம் முதலிய சகல சுரங்களை அடியோடு போக்கும். டப்பா 1-க்கு ரூபா 1. வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

12. உரோம சம்ஹாரி:— இந்த சூரணத்தை மயிருள்ள இடத்தில்தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா 4 ஒன்றுமுதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

13. சுகந்த பல்பொடி:—நல்ல ஜீரண சக்தியைத்தரும். பல்வலி எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1-க்கு விலை அணா 3. வி. பி. சிலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

14. ஸ்கலிதாக்ஷிணி:—பலஹீனத்தினாலும், உஷ்ணத்தினாலும், சிற்றின்பத்தில் பாலியத்தில் நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தினாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிறுத்தி, தேக திடத்தை தரும். சீசா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையிலும் அணா 5 பிரத்தியேகம்.

15. உயர்ந்த கஸ்தூரி:—மிகவும் சேர்த்தியானதும், முதல் தரமானதும், காஷ்மீர் தேசத்திலிருந்து நேராகவரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும் தோலா 1-க்கு ரூபா 48. ஒரு ரூபாய்க்குகுறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. சிலவு பிரத்தியேகமாகும்.

16. தேள்கொட்டின் மருந்து:—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால், தக்ஷணமே விஷமிறங்கி, வருத்தப்பட்டு, சகிக்கமுடியாத வேதனையில் நின்று நீங்கி, யாவரும் ஆச்சரியப் படத்தக்கவிதமாய், ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சீசாக்கள் வரையிலும் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

முக்கிய குறிப்பு —ஒரே தடவையில் 12 சீசா தேள் கொட்டின் மருந்துக்குக் குறையாமல் வாங்கினால் டஜன் 1-க்கு ரூ. 2-8-0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம். "இக்குறிப்புதேள்மருந்துதவிர மற்றெந்த மருந்திற்கும் சம்பந்தப்படமாட்டாது."

(குறிப்பு) இந்த இடங்களில் மலையாளம், தெலுங்கு, கன்னடம்முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவுசெய்து தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியிற் குறித்த விலாசத்துக்கு விவரமாகஎழுதிப் பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

☞ எனது விலாசம்
பி. சுப்பராய்,
ஆயுர்வேத ஔஷதசாலை,
ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்
கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

☞ MY ADDRESS
P. SUBBAROY
Ayurvedic Pharmacy,
Sri Venkatesa Perumal Koil
Sannathy, TANJORE.